(ஈ) உரிமைக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரிமைக் குழுவிற்கு பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

“தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 227-ன்கீழ், 2001-2002 ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினான்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

1. அறிவிப்புகள் — தொடர்ச்சி

(ஆ) குழுக்களுக்குத் தேர்தல்—கால அட்டவணை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைக் குழுக்களுக்கான தேர்தல். ஒற்றை வாக்கு முறைப்படி, தேர்தல் நடத்துவதற்கு, பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ், மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, உரிமைக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, வேட்பாளர்கள் வேட்புத் தாள்களை 2001 ஆம் ஆண்டு மே திங்கள் 31 ஆம் நாள், வியாழக்கிழமை முற்பகல் 11-00 மணிக்குள் சட்டமன்றப் பேரவை முதன்மைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத் தாள்களை முதன்மைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். வேட்புத் தாள்கள் 2001 ஆம் ஆண்டு மே திங்கள் 31 ஆம் நாள் வியாழக்கிழமை பிற்பகல் 5-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்